**வாக்குமூலம்**

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**

**வழக்கு எண் : SC.No. 316/2022**

**வழக்கு சாட்சி PW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பெருமாள் | தாலுகா | : | செங்கோட்டை |
| தந்தை பெயர் | : | பிச்சையா | தொழில் | : | தலைமைக்காவலர் |
| கிராமம் | : | புதூர் | வயது | : | 43 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of August 25th, 2025.

**(2ம் எதிரி ஆஜரில்லை. இதர எதிரிகள் ஆஜர். கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது தென்காசி காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் நான் அச்சன்புதூர் காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணியில் இருந்தபோது, கடந்த 04.08.2015 அன்று காலை 06.00 மணிக்கு அச்சன்புதூர் காவல் ஆய்வாளர் அவர்கள் தலைமையில் நானும், சிறப்பு சார்பு ஆய்வாளர்கள் சேக் பாஷல்உசைன், ராஜேந்திரன் ஆகிய போலீஸ் பார்ட்டிகள் சகிதம் அச்சன்புதூர் – காசிதர்மம் ரோட்டில் சின்னக்காட்டு செல்லும் விலக்கில் ரோந்து செய்யும்போது கிழக்கிலிருந்து மேற்காக TN-76-M-1473 என்ற பதிவெண் கொண்ட பஜாஜ் டிஸ்கவர் இருசக்கர வாகனத்தில் பின்னர் ஊர், பெயர் கேட்டு தெரிந்து கொண்ட பிச்சைக்கனி என்பவரை இருசக்கரவாகனத்தை ஓட்டி வர அவருக்கு பின்னே மதிசெல்வம் சாக்கு பையுடன் உட்கார்ந்து கொண்டு வந்தார். அதற்கு பின்னால் பால்பாண்டி உட்கார்ந்து கொண்டும், மற்றொரு இருசக்கரவாகனமான TN-76-Q-7106

டிவிஎஸ் வாகனத்தை சந்தனபாண்டியன் என்பவர் ஓட்டியும், அதற்கு பின்னால் சங்கர் என்பவரும், அவருக்கு பின்னால் இசக்கித்துரை என்பவரும் உட்கார்ந்து வந்தவர்கள் போலீஸ்கார பார்ட்களாகிய எங்களை கண்டதும் அவர்கள் பின்னால் திரும்பி செல்ல முற்பட்டார்கள். முதலில் வந்த வண்டியில் உள்ள 3 பேர்களையும் மடக்கி பிடித்தோம். 2வது வண்டியில் வந்த இசக்கித்துரையை மட்டுமே பிடித்தோம். சந்தனபாண்டியனும், சங்கரும் இருசக்கரவாகனத்தில் ஓடி விட்டார்கள். மீதமிருந்த 4 பேரையும் சோதனை செய்தபோது, மதிசெல்வம் வைத்திருந்த சாக்குப்பையில் ஒரு SBBL துப்பாக்கி இருந்தது. அந்த வழியாக வந்த மீராகனி, மாடசாமி ஆகிய சாட்சிகள் முன்னிலையில் மதிசெல்வம் தாமாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி மதிசெல்வம் எடுத்து ஆஜர் செய்த ஒரு துப்பாக்கியையும், 5 தோட்டாக்களையும் அத்தாட்சி பிறப்பித்து ஆய்வாளர் கைப்பற்றினார். அதில் மீராகனி, மாடசாமி கையெழுத்து செய்தார்கள். எதிரி பிச்சைக்கனியிடமிருந்து வண்டியும், ஒரு தோட்டாவும் கைப்பற்றப்பட்டது. எதிரி பால்பாண்டி வைத்திருந்த ஒரு தோட்டா கைப்பற்றப்பட்டது. எதிரி இசக்கித்துரை வைத்திருந்த ஒரு தோட்டா கைப்பற்றப்பட்டது. எதிரி சந்தனபாண்டியும், சங்கரனும் வைத்திருந்த இரண்டு தோட்டாக்களை அவர்கள் எடுத்து சென்று விட்டார்கள். சொத்துக்கள் மற்றும் எதிரிகளையும் காவல்நிலையம் கொண்டு வர ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**</u> இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.26 12:02:24 +0530

**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No. 316/2022</u>**
**<u>வழக்கு சாட்சி PW-3</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மீராகனி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ரஷப்மைதீன் | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | அச்சன்புதூர் | வயது | : | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of August 25th, 2025.

**(2ம் எதிரி ஆஜரில்லை. இதர எதிரிகள் ஆஜர். கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் அச்சன்புதூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 04.08.2015ம் தேதி, காலை 07.00 மணிக்கு எதிரி மதிசெல்வம் வைத்திருந்த கள்ளத்துப்பாக்கியையும், துப்பாக்கி வைத்திருந்த சாக்கையும் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார்கள் என்றும் அதில் நானும், மாடசாமி என்பவரும்

சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும், பின்பு அன்றைய தினம் 07.30 மணிக்கு எதிரி பிச்சைக்கனி வைத்த கையில் வைத்திருந்த மேற்படி கள்ளத்துப்பாக்கிக்கு பயன்படுத்தக்கூடிய தோட்டா, அவர் ஓட்டி வந்த TN76 M1473 பதிவெண் கொண்ட Bajaj Discover மோட்டார் சைக்கிளையும் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார்கள் என்றும் அதில் நானும், மாடசாமி என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும், பின்னர் 07.45 மணிக்கு பால்பாண்டி கையில் வைத்திருந்த தோட்டா ஒன்றையும், பின்னர் 08.00 மணிக்கு இசக்கித்துரை கையில் வைத்திருந்த தோட்டா ஒன்றையும் போலீசார் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார்கள் என்றும், அதிலும் நானும், மாடசாமி என்பவரும் சாட்சிகளாக கையொப்பமிட்டோம் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.26 12:02:32 +0530